647

64

ஸ்ரீ கைலாசவிநாயகர் நான்மணிமாலை.

0-,194NMC,D
N46
113911

ஆக்கியோன்:

மெ. மெய்யப்ப செட்டியார்

ஓம்

சிவமயம்

செயங்கொண்டசோளீசர் துணை.

தேவகோட்டை
கருதாவூருணி ஸ்ரீ கைலாசவிநாயகர்
நான்மணிமாலை.

இது

மேற்படியூர்

உ. ராம. மெ. சுப. சேவு. மெ.

மெய்யப்ப செட்டியாரால்

இயற்றப்பெற்றது.

பார்த்திப ௵ மாசி ௴

ஓம்
சிவமயம்.

நான்முகம்.

இது
மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர்
ஸ்ரீமத்- சு. நல்லசிவன்பிள்ளை அவர்கள் எழுதியது.

"நான்மணி மாலை" என்பது, முறையே வெண்பாவும், கலித்துறையும், விருத்தமும், அகவலும் ஒன்றன்பின் ஒன்றாக அந்தாதித் தொடையால் நாற்பது செய்யுட்களாகப் பாடப்பெறுவதோர் பிரபந்தம்.

இதனை "வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல், பின்பேசும் அந்தாதியி னாற்பதுபெறின், நான்மணிமாலை யாமென நவில்வர்" என்றார் இலக்கண விளக்க நூலாசிரியர். இலக்கண விளக்கம் (அ௨க)

சொற்றொடர்நிலை, பொருட்டொடர்நிலை, என்னும் இரண்டனுள் இது சொற்றொடர் நிலையின்பாற்படும். "செய்யுளந்தாதி சொற்றொடர்நிலையே" என்றார் தண்டியாசிரியர். (தண்டியலங்காரம், கக.)

நான்குமணிகளாற் கோக்கப்பட்டதொரு மாலை போறலின் நான்மணிமாலை யென்னும் பெயர் கொண்டது. கருதாவூருணிக் கைலாசவிநாயகர் மாலை என்னும் இந்நூல், செந்தமிழ்நாட்டின் சிகரம் போன்றதும், செல்வப்பெருக்கிற் குபேரநகர் போன்றதுமாகிய

தேவகோட்டை யென்னுந் திருநகரில் கருதாவூருணிக் கரையிற் கோயில் கொண்டுறையும் கைலாசவிநாயகப் பெருமான் மீது பாடப்பெற்றது.

இந்நூலை ஆக்கியோர் அந்நகர்த் தனவைசிய சிகாமணியும், பொருட்செல்வம், கல்விச்செல்வம் என்னும் இருபெருஞ் செல்வங்களுடன் சிவனடியே சிந்திக்கும் சிவஞானச் செல்வமும் சிறந்து விளங்கு பவர்களும், "எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ் — செல்வர்க்கே செல்வந் தகைத்து" என்னும் பொய்யாமொழிக்கு எடுத்துக்காட்டாக வுள்ளவர்களும், "ஈத லிசைபட வாழ்த லதுவல்ல — தூதிய மில்லை யுயிர்க்கு" என்று கருதுபவர்களும், விலக்கிய வோம்பி விதித்தன புரியும் நலத்தகையாளருள் ளொருவரும், பிறர்மனை நயவாப் பேராண்மையாளரும் ஆகிய ஸ்ரீமான். உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பசெட்டியாரவர்களாவர். இந்நூல் சொற் சுவை, பொருட்சுவை, பத்திச்சுவை நிரம்பப் பெற் றுள்ளது. பொருட்செல்வம் போன்று கல்விச்செல்வமும் நிறைந்த இந்நூலாசிரியர் இதுபோன்ற இன் னும் பலப்பல நூல்களியற்றி உலகிற்குதவிப் புகழும் புண்ணியமும் எய்தும் வண்ணம் இவர்கட்கு நீண்ட ஆயுளையும் அரோக திடகாத்திரத்தையும், மேன்மேலும் பாக்களியற்றும் வாக்குவன்மையையும் அருளும் படி எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை இறைஞ்சுகின்றேன்.

உ

சிறப்புப் பாயிரம்.

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனவித்வான்
ஸ்ரீமத்- ஆ. சந்திவேற்பிள்ளை அவர்கள் இயற்றியது.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

வானளக்கு மெழுநிலைக்கோ புரங்க ளோடு
வனசமலர்த் திருமருவும் வரைக டம்மைத்
தானளக்குங் கொடிமாட நிறையுஞ் செல்வத்
தனவணிகர் வாழ்தேவ கோட்டை தன்னிற்
றேனளக்கு மதுரமொழிச் சேவு கப்பேர்ச்
செழுந்தனவை சியன்குமரன் சிறந்த கல்வி
மானளக்குஞ் சீர்த்தியினு னென்று மோங்கும்
வளந்திகழு மெய்யப்ப வள்ளற் கோமான்.

ஊருணியி னிறைநீரை யொத்த செல்வ
னுயிரினுமோம் பிடுமொழுக்க னுண்மை நூல்ச
டேருணிய நியினின்று மாறி டாத
செழுமதியன் மலர்வதநன் செம்மை வாய்ந்த
பாருணிய நியர்போற்றும் பண்ப னன்மை
பயிலுமுள னுதுலர்க டம்பா லென்றுங்
காருணிய னுயிரினுக்கூ றஞ்சு மேன்மைக்
கவினடையன் பிறமாதைக் கருதல் செய்யான்.

மத்தமதி நதியறுகு வன்னி கொன்றை
வனைசடில னையாறன் வாம மேவுஞ்
சத்திமதி டிருக்கோயி லேட கத்துச்
சங்கரனை லயமேலே வானே ரென்று
நத்துமிலம் பையங்கோட்டூர் தன்னின் மேய
நரைவிடையொன் றுடையபிரான் றளியு முள்ளப்
பத்திமிகப் பணிசெய்து கும்ப நன்னீர்
பலர்போற்ற வாட்டுவித்த பான்மை யாளன்.

வான்மணக்கும் புலவர்தமை மகிழக் காக்கும்
வளமலிகற் பகமென்ன மருவு மிப்பார்
மேன்மணக்கும் புலவர்குழா மகிழ்ந்தின் பாக
மேவுறக்காக் குங்கரத்தான் விருந்தி னர்க்குப்
பான்மணக்குஞ் சோறளித்து முகமன் கூறும்
பனிமொழிய னிசைபாடி நாடு மாறு
கான்மணக்குந் தொடைத்தோளான் றெண்டர் தம்பாற்
களவிடத்தும் பத்தியுளான் கோபங் காய்ந்தான்.

இந்திரன்விண் ணோர்மால்பங் கயன்றோள் சேரு
மெழிற்குலமங் கையரணிமங் கலநாண் காத்த
கந்தரன்வாய் மலர்ந்தமறைப் பாட சாலை
கலைதெளிசாத் திரப்பாட சாலை கந்தந்
தந்திடுபன் மலர்தருநந் தனங்க ளாதி
தக்கதிருப் பரன்பணிக ளான வெல்லாஞ்
சந்ததஞ்செய் துவக்கின்ற தன்மை யாளன்
றவளநீ றணிகண்டி சாரு மெய்யான்.

குயிலாரும் பொழிற்றேவ கோட்டை யிற்சற்
குணன் கருத்தா னாருணியின் குணபான் மேவுங்

கயிலாச விநாயகருக் கன்பு கூர்ந்தோர்
கவின்மிகுநான் மணிமாலை யாத்துப் பூவிற்

பயில்பார்த்தி பக்குப்ப மெட்டிற் சார்ந்த
பகர்சங்கட சரசதுர்த்தி யிலத்தே வுக்குத்

தயிலாதி யபிடேகத் துடனே லட்சார்ச்
சனைசெய்திந் நாலையரங் கேற்றி னானல்.

இத்தகைய செயற்கரிய செயலைச் செய்த
வெழிற்பெரியன் மெய்யப்ப னென்னு நாம

வுத்தமவை சியச்செல்வன் கடவு ளார்கட்
குயர்ந்தபணி மேன்மேலு முஞற்றிக் கற்பு

சித்தமதிற் றிகழ்மனைவி மக்க ளன்னை
சிறந்தசோ தரராதி சுற்றஞ் சூழச்

சத்திசிவ னைங்கரன்சண் முகன்றன் பாத
சரோருகத்தின் றிருவருளாற் றழைத்து வாழி.

உ

பாலஞுவாயர் துணை.

தருமபுர ஆதீன வித்வான் பாலகவி
ஸ்ரீமான். வயிநாகரம் வே. இராமநாதஞ் செட்டியாரவர்கள்
இயற்றியது.

நேரிசை வெண்பா.

கங்கையினு நல்லபுனற் காவிரிநாட் டையாற்று
மங்கை யறம்வளர்த்த மாதேவி — பங்கைமகிழ்
பெம்மான்பொற் கோயிற் பிறங்க வினிதமைத்த
வம்மா மரபுவரு வான்.

கட்டளைக் கலித்துறை.

வருவார் முகங்கண் மலர முகமன் வழங்குசெம்மல்
திருவார் சிரபுரச் சேயன்று செந்தமிழ் தீட்டியிட்ட
ஒருவார் சுவடிவான் வைகைப் புனலெதி ரோடியுற்ற
மருவார் திருவே டகத்திறை கோயில்செய் மாட்சியனே.

விருத்தம்.

செய்யாள் கருணை பெருகுதலாற்
செல்வ மல்கச் சிறப்புற்றான்
மெய்யாங் கல்விப் பொருள்படைத்தான்
வெள்ளை யன்னை விரும்புதலாற்
பொய்யா நெறிகள் புகாதெங்கள்
புனிதச் சிவனன் னெறிபுகுந்தா
னெய்யார் சூலப் படையுடைய
நித்தன் கழலே நினைவுள்ளான்.

நேரிசையாசிரியப்பா.

உள்ளும் புறமுந் தெள்ளிய நேர்மையன்
நல்லவை கைக்கொண் டல்லவை விடுத்தோன்
தேவ கோட்டை மேவிய செல்வன்
வணிகமா மரபுக் கணியென வந்தோன்
நேமங் கோயிலான் பூமகிழ் சேவக
னாற்றிய தவத்தின் றேற்றமா யுற்ற
னொப்பரும் புகழ்மெய் யப்பனற் பெயரான்
கருத்தா னாருணித் திருத்தளி யுறையும்
வாயமர் கரக்கை லாயவி னாயகன்
தான்மலர் வணங்கியோர் நான்மணி மாலை
செந்தமிழ்ச் சுவையெலா முந்த
யாத்தனர் வாழியர் மாத்தரை மிசையே.

இராமநாதபுரம் இராஜாஸ் ஹைஸ்கூல் சிட்டையர்டு
தலைமைத் தமிழ்ப் பண்டிதரும்,
மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியருமான
ஸ்ரீமத். K. சிவஞானம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பொன்பூத்த கொடிமாட மிகுதேவ
கோட்டையெனும் புரியி லென்றுந்
தென்பூத்த கருத்தானூ ருணிக்கரையிற்
றிருக்கோயில் சிறக்கக் கொண்ட

மின்பூத்த கொடியுமையாண் மைந்தனென
வுலகுபுகழ் விமல னாகிக்
பொன்பூத்த கைலாச விநாயகப்பேர்
கொண்டபெருங் குரிசில் தாட்கே.

கன்னலுநற் கனிச்சாறு நல்லமுதுந்
தீந்தேனுங் கலந்தா லொப்ப
நன்னயங்கொள் பாவினத்தால் நான்மணிமா
லைப்பனுவல் நவின்றிட் டானல்
அன்னவன்றான் யாரெனிலோ வறைகுதுநற்
புலவீர்கா ளவனி தன்னிற்
றென்மைநெறி முறையொழுகி வாய்மையினிற்
பிறழாத தூயோ ராகி,

கங்கையணி கடவுளடி மறவாது
திருப்பணிகள் கவின வாற்றி
யெங்கணுமெய் யரனடியார்க் கின்னமுதுஞ்
சொன்னமுநன் கீந்தே யென்று
மங்களமார் தனவணிகர் மக்களுமொக்
கலுந்தழைய மனம கிழ்ந்து
பொங்குபுக ழுடனுறையுந் தேவகோட்
டைப்பதியிற் பொருந்தி வாழ்வோன்.

ஏரகத்துப் பெருமானி னிணையடிகண்
மறவாம லென்றும் போற்று
நாரகத்தான் செம்மையுளான் சேவியப்பப்
பேர்புனைந்த நல்லோன் மைந்தன்

சீரகத்தார் புனைமரபோர் திகழுவரு
நற்குணத்தான் சீர்த்தி யுள்ளான்
பாரகத்தார் புகழ்ந்தேத்தும் பலகலையு
மொருங்குணரும் பண்பு மிக்கான்.

பெருமைதரு மையாற்றெம் பெருமாற்குத்
திருப்பணிகள் பிறங்கச் செய்வோ
னருமையுள பாவலர்க்கு மாதுலர்க்குந்
தினந்தினமு மன்பா யீய்வோ
னிருமையினு முயர்வளிக்கு மெழினூல்கள்
பலப்பலவு மின்புற் றுய்வோ
னொருமைமிகு மதிவலியான் மெய்யப்ப
னெனும்பெயர்கொ ளுரவோன் மாதோ.

திருநெல்வேலிப்பேட்டை,
சேக்கிழார் சங்கச் செயலாளர்
ஸ்ரீமத். வா. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

பேரோங்கு தேவிப் பெரும்பதியி னற்பணிக
ளோரோங்கச் செய்யு மெழிலாளன் — சீரோங்கும்
அய்யன் கயிலாச வைங்கரன்பா மாலைதனை
மெய்யப்பன் செய்தளித்தான் மேல்.

செல்வ மொடுகல்விச் சீரார் பயன்றுய்க்க
வெல்லோர்க்கு மீந்துவக்கு மேந்தலிவன் — சொல்லுறதி
வாய்ப்பக் கயிலாச வாரணன்றன் பேரருளைப்
பூப்பமணி மாலைதந்தான் போற்று.

எல்லாந் தரும்பரம வீடேற்று மாபதத்த
னல்லான் கணபதியை நாடுங்கா—லொல்லையவர்
தாள்போற்றி மெய்யப்பன் றான்செய்த நான்மணித்தார்
தாளாது பேணத் தரும்.

உ
செந்திலாதிபன் துணை.

தேவகோட்டை நகரத்தார் ஹைஸ்கூல் தமிழாசிரியர்
ஸ்ரீமத். ச. சண்முகசுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

மத்த கோகில விருத்தம்.

பொன்னி மாபுன றங்கை யாமலை
கொண்டு பொன்னொடு முத்துமே
வன்ன தேமல ரள்ளி வீசிடு
மாழநீர்க் கரைகொண்ட தோர்
தன்மை பெற்றுயர் சோழ நாட்டிடை
தாவி லொண்வள முற்றசீர்த்
தொன்மை சான்றவை யாறு மேவுறு
தூய னற்கழல் போற்றுவான்.

தேவி மாநகர் மன்னி வாழ்தரு
செல்வ னந்தன வணிகரு
டேவி வாணி யிலக்கு மீயருள்
சேர்ந்து பொன்மலர் நாற்றமே
மேவி ஞெலனைப் பாப்பு னைந்திடு
மேதை கொண்டவ னென்றுமே
பூவி றன்னிடம் வந்த வர்குறை
போகு மாறுசெய் பூபனே.

ஏட கம்முத லாய நற்பதி
யெண்ணி லாதவை மேவிவா
மூட கத்தளி ரன்ன சேவடி
யன்ன லோடுவை யாற்றுறை
பாட கந்திகழ் பாத தர்மசம்
வர்த்த னீமகி மூலயங்
தேட ரும்பல சிற்ப மோடுயர்
தென்பெ றப்பணி செய்தனன்.

தேனி னின்சுவை திங்க ருட்பல
திதி லாவுயர் சொற்களால்
மேனி லைபெற வான்ற சீர்கொடு
மேவு நான்மணி மாலையே
தானி யற்றினன் மேன்மை சால்கருத்
தான்ற ஞாருணிக் கீட்டிசைப்
பானி லாவுகை லாச மாமுகன்
பாத மேத்துமெய் யப்பனே.

இன்னு நூற்பல யாத்த ளித்திவ
　　ணேய்ந்த நற்புக ழோங்கிட
வன்னை தன்மனை மக்க டம்பிய
　　ராய சுற்றமொ டென்றுமே
யின்ப வாழ்வுற வேய ருள்தர
　　வெந்தை சண்முகன் றுளிணை
நன்மை யாமென வெண்ணி யன்புட
　　ணுடொறுந் தொழு தேத்துவேன்.

இராமநாதபுரம் ஜில்லா பாகனேரி செல்லூர்க்கிழார்
ஸ்ரீமத். செ. ரெ. இராமசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றியது.

நேரிசை யாசிரியப்பா.

திருமக ளாக்கமு மருமக ளாக்கமும்
பெருமகிழ் வுடன்வளர் பெற்றியி னீண்டிக்
கலத்தினுங் காலினுங் காண்பொரு ளீட்டுஞ்
சொலத்தகும் வணிகர் தொல்குடித் தோன்றல்
கரவா வண்கை யுரனுடை யாளன்
சிரலெனத் தாழைச் சிறுமடல் காணூஉ
விரைநறுந் தாமரை மென்மலர்ப் பரப்பிற்
சரேலென மீனினந் தாவும் பொய்கைசூழ்

விழுப்பயன் கொண்மார் மேனா லாய்ந்து
களிப்புறு தேவ கோட்டைவாழ் காவலன்
மாவுறை மார்பன் சேவுகப் பெயரோன்
றுவில்சீர்த் தவத்தாற் றமிழொடு பிறந்த
பொய்யில் புலவர் தம்வாய் புகழு
மெய்யப்பன் என்னும் விழுப்பெயர்ச் செவ்வேள்
தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரஃகுடையார் தம்முட் குழீஇ
நகுதலே யின்பென நன்காய்ந் துணர்ந்தோன்
பகவன் றிருவடிப் பத்திமிக் குள்ளோன்
பொய்யா மொழிக்கு மையா றிறைவற்கு
மைதீர் கோவில் வனப்புடன் வகுத்தோன்
அறம்புரி கொள்கை யமைந்த பண்பினன்
மறங்கெடுத் தின்ப வாரிதி யருளு
மொருகை யிருகோட்டு முக்க ணொள்ளிய
பெருஞ்செவி யொருத்தன் முகத்துப் பெம்மான்
முன்னவன் சின்ன முருகற்கு மூத்தோன்
பொன்னடித் தாமரைப் பூவுக் கணியாய்
நால்வகைச் சொன்மலர் நலனுற வெடுத்து
ஏலு நான்மணி மாலையா மியற்போர்
தாங்கொடு வகுத்துத் தந்தனன் பார்மேல்
ஈங்கெந் தமிழ்த்தாய்க்(கு) ஏற்ற வணியென
வாழிய வுலகிடை மன்னி
யூழி யூழி யுவப்புட னுயர்ந்தே.

புதுவயல் நடராஜபுரம், ஸ்ரீமான்

வெ. பெரி. வீர. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள்

இயற்றியது.

வெண்பா.

ஆவனவல் லாதனவில் லாதெவையு மாகமுன
மேவவருட் கைலாச விநாயகனார் — பூவுலகிற்
றேவகோட் டைக்கருத்தான் றீந்தடக்கீழ் பாலமைந்தான்
சேவகமெய் யப்பனுளந் தேர்ந்து.

தேய்வண் டாலைமத்துத் தீண்டாச் செழும்பாறே
னேயகண் டின்னமுத மென்னவுரை — தூயமொழி
யாலெமது சேவுகமெய் யப்பனவ் வைங்கரற்கே
நாலுங்க லந்தமைத்தா னால்.

நான்மணிமா லைதந்தா னுடு மனமேறி
ஞன்மணிமா லைதீர்த்தா னற்சேய்க்கே — நான்மணிமா
லையென் றுவந்துரைப்பே னுவலருஞ் சொற்பொருளான்
மெய்யென்பர் வாழ்க மிளிர்ந்து.

சுபம்.

ஓம்
சிவமயம்.
செயங்கொண்டசோளீசர் துணை.

கைலாசவிநாயகர் நான்மணிமாலை.

காப்பு-வெண்பா.

பத்தியாய் நான்மணிப் பாமாலை பாடவெற்குச்
சத்தியெல்லா நல்கச் சடுதியிலே — யத்திமுகா
வென்னுடைய தாளை யுவந்தினிது போற்றினேன்
முன்னவருள் செய்வாய் முனின்று.

நூல்

நேரிசை வெண்பா.

ஓங்கு புகழ்க்கருத்தா னூருணியின் கீழ்கரையிற்
பாங்குடனே வாழும் பரமனன்பு — தாங்குமைந்தா
சீலமிகுங் கைலாசச் சிந்துரனே வாழ்ந்திடவெக்
காலமுஞ் செய்வாய் கனிந்து. (க)

கட்டளைக் கலித்துறை.

கருத்தான் குளக்கரைக் கீழ்பாலின் மேவுங் கணேசவென்று
மருத்தி யுடனெங் களைமகிழ்ந் தாதரித் தாளநின்றுன்
கருத்துடன் யாங்க டினந்தோறுங் கண்ணிய மாய்த்தொழுதோம்
விருத்தியின் பாவரு நன்கு விளங்கிடச் செய்குவையே. (உ)

விருத்தம்.

செந்தண் மறையா டினம்வாழுந்
தேவ கோட்டை நகர்மேவுங்
கந்தன் றனக்கு முன்னவனே
கைலைப் பெயரின் விநாயகனே
பந்த மறவே புனதுதிருப்
பாதம் போற்றி னேனென்று
மெந்தம் பியர்க ளுடன்மக்க
ளெழிலாய் வாழ வருள்வாயே. (௩.)

நேரிசையாசிரியப்பா.

எழின்மிகு தேவ நகரினி லேற்றமாய்
மொழிகயி லாச வைங்கர மூடிக
வாகன சித்தி புத்தி மணாள
வேக தந்த வெந்தைக் கேற்ற
வருளது சுரந்த வண்ணலே சிறந்த
கருணை மிகுநலன் கனிந்து
தருவா யெமக்கித் தரணியி லென்றுமே. (௪)

நேரிசை வெண்பா.

மேதினியோர் போற்றுகின்ற மேன்மைமிகுந்தேத்தும்
பாதியுமைக் கீந்த பரமன்றன் — கோதிலா
மைந்த கயிலாச மாமுகனே யெங்களைநீ
சந்ததமுங் காத்தருள்வாய் சார்ந்து. (௫)

கட்டளைக் கலித்துறை.

காமேவு தேவகோட் டைக்கருத் தாவின்போய் கைக்குணபான்
மாமேவு றுங்கயி லாச விநாயக மாமுகற்குப்
பாமேவு மிம்மாலை பத்தியாய்ச் சாற்றினன் பாரிலென்றும்
யாமேவு வாழ்வினை யாதரித் தாள்வ னகமகிழ்ந்தே. (கா)

விருத்தம்.

தேவ தேவர் தினம்போற்றுந்
தேவ கோட்டைப் பதியினில்வாழ்
பாவ லோர்க ளேத்துமையாள்
பயந்த கயிலை விநாயகனே
காவ லோரும் பாரோருங்
கணிச மாக்கொண் டிடயாங்க
ளேவ லாள ருடனென்று
மெழிலாய் வாழ வருள்புரிவாய். (எ)

நேரிசையாசிரியப்பா.

புரிகுழல் வல்லபை புகழ்ந்து போற்றுங்
கரிமுக கருத்தா னாருணிக் கணேச
குன்றின் மேவுங் குகன்றன் முன்னவ
நன்ருய் நாங்க ணுனிலம் புகழப்
பத்தியாய் நின்றன் பாதந் தொழுதேன்
சித்தியெல் லாம்பெறச் சீர்த்தியாய்
நத்தியே யென்று நயந்தருள்வாயே. (அ)

நேரிசை வெண்பா.

அருத்தியுடன் றேவாசுக ரன்பர்தொழ வாழுங்
கருத்தானின் பொய்கைக் கணேச — விருத்தியொடு
மென்றுமே வாழ்வதற் கெண்ணியன்பா யேத்தினே
னன்றுனது தாளிணையே நான். (கூ)

கட்டளைக் கலித்துறை.

தாளிணை யாம்போற் றிநேந்தேவ கோட்டையிற் றங்குபுகழ்
மாளிகை சூழ்கருத் தான்வாவி மாமுக வென்று முன்றன்
ரேளினிற் பூந்தாமஞ் சூட்டினே நாளுந் துலங்குபெருச்
சாளியின் மீதேறி வந்துனைச் சார்ந்தோர் தமக்கருளே. (ய)

விருத்தம்.

சார்ந்தோர் தங்கட் கருள்செயவே
தாளைச் சூட்டு கின்றவனே
யார்ந்தோர் போற்று மனம்படைத்த
வன்பன் கருத்தான் குளக்கரையிற்
கூர்ந்தோர் கொம்பு தனைக்கொண்டு
குலவுங் கயிலைக் கணேசவுனைச்
சேர்ந்தோர் தமைப்போ லெங்களையுஞ்
சேர்த்தெந் நாளு மருள்வாயே. (யக)

நேரிசையாசிரியப்பா.

நாளுங் கைலைவி நாயக மூர்த்தியே
கோளுங் கூற்றுங் கொடுமையில் லாமே
பண்பாய் வாழ்ந்திடப் பாரினி லென்றுங்

கண்பார்த் திடவே கனிவுடன் ஞெழுதே
னல்கி டெமக்கு நல்வரம்
பல்கிட வென்றே பரம நீயே. (மஉ)

நேரிசை வெண்பா.

பரம கருத்தானின் பங்கயப்பொய் கைப்பாற்
றரமா யமைத்த தளிவாழ் — பரமன்றன்
கண்ணியசே யாகுங் கயிலேக் கணேசவெமைப்
புண்ணியராய்ச் செய்வாய் புரிந்து. (மஙு)

கட்டளைக் கலித்துறை.

**சேகதலத் தோர்புக ழுந்தேவ கோட்டைத் திருவமிகு
நகா மதிலே கருத்தானி னற்கயத் தின்குணபாற்
பகருங் கயிலா சவிநா யகபணி பக்தரேம்பாற்
றிகழு மளகே சனைப்போலச் செம்மைநல் வாழ்வருளே. (மச)**

விருத்தம்.

வாழ வருள்வா யென்றுன்னை
மகித லத்தோர் தினம்போற்றத்
தோழன் கருத்தா னன்பாகத்
‡ தொட்ட வாவிக் கீழ்கரைவாழ்
வேழ முகனே யெங்களுக்கு
வேண்டும் வளங்க ளெல்லாமு
* நீழன் மிகநீ கொடுத்திடவே
நின்றுண் மலரைப் போற்றினமே. (மரு)

---

‡ தொட்ட — தோண்டிய. * நீழல் — பிரகாசம்.

நேரிசை யாசிரியப்பா.

போற்றி யென்றும் புநிதச் சிவனை
யேற்றி வாழு மெழின்மிகு தேவ
கோட்டைக் கருத்தான் குறித்தமை கோயிலிற்
றேட்ட முடனே வாழுந் தேவ
கயிலை விநாயக காத்தெங் களுக்குப்
பயிலும் பாக்கியம் பண்புட
னென்றுந் தந்தரு ளினிதுள மகிழ்ந்தே. (௰சு)

நேரிசை வெண்பா.

இனிதே பரமசிவ னின்பமுறச் சூழ்ந்து
கனிபெற்ற கைலைக் கணேசப் — புனிதனே
நன்றாக நாங்க ணயந்து மிகவாழ
வென்று மருள்க விசைந்து. (௰எ)

கட்டளைக் கலித்துறை,

இசைந்து கருத்தான் குளக்கரைக் கீழ்பா லினிதுறையு
மசையுந் துதிக்கைக் கயிலாச வைங்கர னேயடியேம்
வசையின் மொழியின்றிப் பாரோர்கள் வாழ்த்திப் புகழ்ந்திடவே
‡ பசைந்துபல் பாக்கியம் பெற்றோங்கி வாழப் பணித்தருளே. (௰அ)

விருத்தம்

† பணித்தல் புரியுந் திருத்தேவ
கோட்டைப் பதியிற் பாரொடுவிண்

---

‡ பசைந்து – அன்புகொண்டு. † பணித்தல் – ஈகை.

* கணித்தல் செய்யுந் தனிவாழுங்
கருத்தான் பொய்கைக் கணபதியே
§ நுணித்தல் படைத்தோ ராய்ஞாங்க
ஞாலி னறிவு பெறவறுகு
|| பிணித்தல் சாத்தி ஞெமென்றும்
பிரணைவ ரூப வருள்வாயே. (௰௯)

நேரிசையாசிரியப்பா.

பிரணவ சொரூப பிரம சாரியே
சரண மெனவே தரணியர் செபிக்குங்
கருத்தான் குளக்கரை மேவுங் கணேச
விருத்தியா யாங்க ளருத்தியாய் வாழநின்
பொற்றிருத் தாள்களைப் போற்றி
நற்றிரு வாத்தி சாத்திஞெ நல்கே. (௨௰)

நேரிசை வெண்பா.

நலஞ்சேர் கருத்தான்ற னற்கயத்தின் கீழ்பான்
மலைமறுக்கக் கைலை வரையி — லிலகுதிருப்
பேர்கொண்ட வேரம்பப் பெம்மானே யெங்கட்குக்
கார்போல்யா வுந்தந்தே கா. (௨௧)

---

* கணித்தல் — எண்ணுதல். § நுணித்தல் — நுட்ப அறிவு. || பிணித்தல் — மாலை

கட்டளைக் கலித்துறை.

கார்மே வியமாட மாளிகை சூழ்ந்து கவினளிக்கும்
பார்மே வியதேவ கோட்டைப் பதியிற் பலர்தொழுது
சீர்மேவி வாழக் கருத்தர்ன்செய் சீதளி சேர்ந்துறையு
மேர்மேவு மைங்கர வெங்களைக் காத்தருள் வாயினிதே. (உஉ)

விருத்தம்.

வாய்ந்த கருத்தான் வாவியின்கீழ்
பாலில் வனப்பா யினிதுறையும்

பாய்ந்து செல்லும் மூடிகவா
கனனே பாரி லெங்நாளு

மேய்ந்து போற்றித் தொழுதேத்து
மெங்கட் கென்றும் வளமோங்க

வாய்ந்த புகழின் கயிலாச
வானை முகனே யருள்வாயே. (உங)

நேரிசையாசிரியப்பா.

அன்புடன் கருத்தா னமைத்தபொற் கோயிலி
லின்புடன் மேவி யிருந்தருள் சுரக்குங்
கவின்மிகு கயிலைக் கணேச மாமுக
நவின்றோ நினது நாம நாங்க
ளேற்ற முடனினி தெழிலாய் வாழ்ந்திடத்
தேற்ற மிகவே தெளிந்துன் னுடைய
திருமுன் பத்தியாய்த் தினந்தினம் வந்து
மருவிச் சோதரர் மக்கடம் முடனே
புண்ணிய ராகப் புவியிற்
கண்ணிய மேவக் காத்தருள் வாயே. (உச)

நேரிசை வெண்பா.

கடவா ரணவதநங் கைலைக் கணேச
இடமாக நாங்க டிகழ — விடர்களைந்
தென்று மினிதே யெழிலாக வாழ்ந்திருக்க
நன்றேசெய் வாய்நீ நயந்து. (உரு)

கட்டளைக் கலித்துறை.

நயமல்கு தேவகோட் டைக்கருந் நானெண்ணி நன்கமைந்த
கயமல்கு கீழ்கரை வாழ்கயி லாசக் கணபதியே
செயமல்கு காரிய மெந்நாளுஞ் செய்திடத் தேசோளிர்நின்
புயமல்கு மார்பினிற் ருர்சூட்டி யேதினம் போற்றினமே. (உசு)

விருத்தம்.

மேதி னியிலே வளம்பல்கு
மேன்மைத் தேவ கோட்டையினி
* னேதி பெற்ற மாந்தரெலா
நேர்மை யாக வேத்துகின்ற
நீதி நிறைந்த கருத்தானி
லீர்மல் கியசீர்க் குளக்கரைவாழ்
† பூதிக் கயிலைக் கணேசவெல்லாப்
பொருளு மெமக்கு நல்குதியால். (உஎ)

---

* நேதி — நியதி. † பூதி — செல்வம்.

நேரிசையாசிரியப்பா.

ஆலம துண்ட வரனு ளருமைப்
பாலனே யடியவர் பாலினி தன்பாற்
கேட்ட தெல்லாங் கொடுங்குங் கேண்மை
நாட்டல் செய்யு நண்ப னுமெங்
கருத்தா னாருணிக் கயிலைக் கணேச
திருவோங் கவென்றுஞ் சீர்த்தியா யாங்கள்
மருவிய வறம்பல மல்கிப் பொலிந்திடப்
பெருமை மிகுநின் பேரரு ளதனை
நல்க வேண்டினே னன்கு
பல்வளந் தந்தருள் பரிந்து விரைந்தே. (உஅ)

நேரிசை வெண்பா.

விரைந்தே கயிலை விநாயகனே யாவு
நிரைவாகப் பெற்றிடவே நின்முன் — கரைந்தனமேற்
றேவர் முதலோர் தெரிசிக்குந் தேவவெமக்
காவலுட னேதந்தே யாள். (உகூ)

கட்டளைக் கலித்துறை.

ஆழியின் மீதே துயில்கின்ற வண்ண லணிமருகா
தாழியி னேருத ரத்தவ னேயிந்தத் தாரணியி
லூழியின் றேவே கருத்தானி னாருணி யுப்பன்முகா
வாழியென் றேதிட யாம்போற்றி னேநல் வரமருளே. (ஙம)

விருத்தம்.

வரத கருத்தான் குளக்கரையில்
வண்பார் புகழ வெப்பொழுதுந்

சரதந் திகழும் வளநல்குந்
சவுந்த ரியப்பொற் பாதமதி
லரத னருஞ்சூழ் கயிலாச
வைங்க ரத்து மூர்த்தியென்றும்
விரத முடனே யாங்கண்மிக
மிளிர்ந்து மேவ வருள்வாயே. (௩க)

நேரிசையாசிரியப்பா.

மேவு புகழ்நிறை மேன்மை திகழுங்
கோவுயர் கோபுரங் குலவிடுந் தேவ
கோட்டை நகரிற் கோதிலாக் கருத்தான்
நாட்டங் கொண்டு நன்கமை குளக்கரைக்
குணபா லதனிற் கூர்ங்கோ டொன்றுடன்
றணவா துறையுந் தந்தா வளமுக
வெங்களுக் கென்று மேற்றமாய்த்
தங்கு நலம்பல தந்தருள் வாயே. (௩உ)

நேரிசை வெண்பா.

ஏராருங் கைலாச வேரம்ப யாம்வாழப்
பாராருந் தேவிப் பதியின்கண் — சீராரு
நின்றனது தாளிணைக ணித்தியமுந் தோத்தரித்தோ
நன்றிலிது காத்தருள்க நன்கு. (௩௩)

கட்டளைக் கலித்துறை.

நன்றே மகிழ்ந்துறை யுங்கருத் தான்பொய்கை நற்குணபா
லொன்றேகோம் பார்ந்தகை லாசவி நாயக வும்பன்முகா
மன்றேநின் ருடும் பரமன்றன் மைந்தா வளர்கருணைக்
குன்றே தொழுகின்ற வெங்கட்கு நல்குன் குரைகழலே. (௩௪)

விருத்தம்.

நலமே வழங்கு திருப்பாண்டி
நாட்டிற் றேவ கோட்டையெனுந்
தலமே வாழுங் கருத்தானின்
றடாகக் கரையிற் றங்தைகைமாம்
பலமே பெற்ற கயிலைவிநா
யகனே பத்த ராகுமெங்கண்
மலமே யகற்றி யென்றுமுன்றன்
மாண்பு தன்னை யருள்வாயே. (௧௫)

நேரிசை யாசிரியப்பா.

தன்னை நிகரி றன்மையன் விக்கிர
மன்னவன் றன்னை மாநிலத் தோர்கள்
புகழுங் கருத்தான் புநிதக் குளக்கரை
திகழுங் கயிலை யைங்கரத் தேவனைத்
தினமும் வந்து திருமுன் னியானு
மினமுந் தொழுதோ மினிது
கண்ணிய வாழ்வைக் கருணை புரியவே. (௧௬)

நேரிசை வெண்பா.

கந்தற்கு மூத்த கருத்தான் குளக்கரைவாழ்
தந்திமுகா யாங்களிந்தத் தாரணியிற்—சொந்தமுடன்
சாற்றுகின்ற நண்பர் தழைத்தோங்கி வாழ்ந்திடவே
யேற்றவருள் செய்வா யினிது. (௧௭)

கட்டளைக் கலித்துறை.

செய்யின் வளம்பல மல்குறுந் தேவகோட் டைப்பதியிற்
றுய்யன் கருந்தான் குளக்கரைக் கீட்டிசைத் தோன்றுநவி
யய்யன் கயிலை விநாயக வைங்கரன் றுளிணைகண்
மெய்யன் புடனே தொழுதன மேன்மைதந் தாளுவனே. (௩அ)

விருத்தம்.

மேன்மைத் தன்மை யெந்நாளும்
விளங்குந் தென்னன் மேதினியில்
வான்மை பொழிந்து செழிப்புற்று
வளஞ்சூழ் தேவ கோட்டையின்கண்
நோன்மை மிக்கோர் போற்றியரு
ணுகருங் கயிலைக் கரிமுகனே
நான்மை நீக்கிப் பார்தன்னி
னலமாய்த் திகழ நயந்தருளே. (௩௯)

நேரிசை யாசிரியப்பா.

திகடன வைசியர் சீர்த்தியாய் வாழ்ந்திடும்
புகழ்சூழ் தேவ கோட்டைப் புரியினிற்
பகருங் கருத்தான் றடக்கீழ் பாலி
லிகரிலா தென்று நிலவுங் கயிலை
யும்பன் முகனே யுன்றன் கழலிணை
நம்பகங் கொண்டே நண்ணினே
மெழின்மிக வருள்வா யியாங்க ளோங்கவே. (௪௰)

வாழ்த்து.

கங்கை யணிந்த சிவன்வாழி
    கயிலைக் கணேசன் கழல்வாழி
பொங்கிப் பொழியு முகில்வாழி
    புனிதா கமங்கண் மறைவாழி
தங்கும் புகழின் றமிழ்வாழி
    தரணி யோர்செங் கோல்வாழி
துங்கத் தனவை சியர்வாழி
    துன்றுஞ் சைவம் வாழியவே.

முற்றுப் பெற்றது,

நகரத்தார் பிரஸ், கண்டனூர். 15-3-46, C. 500. (Party Paper,)